1969 மார்ச் 25]

(இ) அரசினர் உறுதிமொழிக் குழுவின் நான்காவது அறிக்கை

Thiru K. VINAYAKAM : Sir, I have the honour to present the Fourth Report of the Committee on Government Assurances as laid on the table.

9. 1968–69-ம் ஆண்டிற்கான இறுதி துணை நிதி அறிக்கை—அளித்தல்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1968–69-ம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின்முன் வைப்பான்வேண்டி உங்கள் முன் வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான விவர அறிக்கை * ஒன்று மன்றத்தின்கண் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மானியக் கோரிக்கையின் மொத்தம் ஏறக்குறைய 66 கோடி ரூபாயாகும். ஆயினும், இதில் 11 கோடி ரூபாய் மட்டுமே வருவாய்க் கணக்கின் பாற்படும்.

இப்போது வேண்டப்படும் நிதி ஒதுக்கத்தின் கணிசமான பகுதி பொதுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குரியதாகும். இதற்கென ஏறக்குறைய 46 கோடி ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. முதற்கண் நோக்குவார்க்கு இந்த நிதி ஒதுக்கம் உயர்ந்த அளவினதாகக் காணப்பட்டாலும், மாநில நிதி வாயில்கள் அதனால் எவ்வகையிலும் பாதிக்கபடவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் நாட்டத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 1966–67-ம் ஆண்டில் செயலுக்குக் கொண்டு வரப்பட்ட கணக்கிடும் நடைமுறை ஒன்றின் காரணமாக இந்த நிதி ஒதுக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது. இதன்படி, மாநில அரசு இந்திய ரிசர்வ் வங்கியிடம் வாங்கும் அதிகப்பற்று அதன் முந்நாளைய பற்றேடு ஒப்பிடும்போது குறைந்து காணப்படும் போதெல்லாம், அக் குறைவு தமிழ் நாட்டுத் தொகு நிதியிலிருந்து இந்திய ரிசர்வ் வங்கிக்குத் திருப்பிச் செலுத்தப்பட்ட தொகையாகக் கருதப்படுகிறது. எனவே, இங்ஙனம் செலுத்தப்பட்ட தொகை ஒவ்வொன்றுக்கும் நிதி ஒதுக்கம் செய்ய வேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட ஒரு நாளில் நாம் ஒரு கோடி ரூபாய் அதிகப்பற்று வாங்கியிருந்து, அடுத்த நாளன்று அந்த அதிகப் பற்றுத் தொகையைத் திருப்பிச் செலுத்துவதாய் இருந்தால், கணக்கிடும் புதிய நடைமுறையின்படி இவ்வாறு தொகை திருப்பிச் செலுத்தப்படுவதற்கு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் பெறவேண்டும். அடுத்த நாளன்றும் ஒரு கோடி ரூபாய் அதிகப்பற்று வாங்கி மேற்கூறியவாறே அதனை அதற்கடுத்த நாளன்றே கொடுத்துத் தீர்த்தாலும் நாம் மேலும் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் பெறவேண்டிவரும். மாதத்தில் எந்த ஒரு நாளிலாவது மாநில அரசுபெறும் அதிகப்பற்று ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாமலேயே இருக்கட்டும். ஒரு நாளில் நாம் ஒரு கோடி ரூபாய் அதிகப்பற்று வாங்குவதாகவும் அதனை அடுத்த நாளன்று திருப்பிச் செலுத்துவதாகவும் வைத்துக் கொள்வோம். இங்ஙனம் ஒரு மாதத்தில் பதினைந்து தடவை நிகழ்வதாக இருந்தால், அதிகப் பற்று ஒரு கோடி ரூபாயாகவே இருந்தும் கூட, அம் மாதத்தில் ஏறக்குறைய பதினைந்து கோடி ரூபாய் அளவிற்கும் நிதி ஒதுக்கம் தேவைப்படலாம். இதனால், வேண்டப்படும் நிதி ஒதுக்கத்தை வைத்து மட்டும், ஒரு மாநிலம் எவ்வளவு தொகைக்கு அதிகப் பற்று வாங்கியிருக்கிறது என்பதைச் சொல்ல முடியாது என்பது தெளிவாகும். ஆகவே, இந்த நிதி ஒதுக்கம் ரொக்க இருப்பில் அன்றாடம் ஏற்படும் மாறுதல்களையே பெரும்பாலும் குறிப்பிடும். உண்மையில் இது நம்முடைய அதிகப் பற்று நிலையை மிகைப்படுத்திக் காட்டுகின்றது எனலாம்.

அதிகப் பற்றினைக் குறித்து இவ்வாறு கூறி வருகையில், இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து நாம் பெற்றுவரும் இந்த அதிகப் பற்று வழக்கத்திற்கு மாறானதென்றோ, அச்சுறுத்தும் அளவில் வாங்கப்படுகிறதென்றோ